[8th March 1958

SRI A. GOVINDASAMY : மத்திய சர்க்கார் ஊழியர்களுடைய சம்பளத்தைப் பரிசீலனை செய்ய இரண்டு பே கமிஷன்களை நியமித்தார்கள். நமது சர்க்கார் ஒரு முதல் கமிஷனையாவது நியமித்து இதைப் பரிசீலனை செய்யக்கூடாதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றி அங்கத்தினர்கள் முன்னாலேயே வைத்திருக்கிறேன். என்ன என்ன விஷயத்தில் செலவைக் குறைக்கலாம். கல்விக்கு எட்டு கோடி என்று இருப்பதை 4 கோடியாகக் குறைத்து இன்னொரு கோடியை சர்க்கார் ஊழியர்களுக்கு சம்பள உயர்வாகக் கொடுக்கலாம் என்று அவருடைய கட்சித் தலைவர் யோசனை கூறினால் அதைப்பற்றிக்கவனிக்கலாம்.

SRI D. S. AUTHIMOOLAM : மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும், ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுக்கும் இடையே உள்ள சம்பள விகிதத்தில் ரொம்ப வித்தியாசம் இருப்பதால், அதை நீக்குவதற்கு நமது சர்க்கார் மந்திரிகளுடைய யோசனை என்ன ? இப்படிப்பட்ட சம்பள வித்தியாசம் இருப்பது நியாயமா இல்லையா என்பதைப்பற்றி நமது அமைச்சருடைய அபிப்பிராயம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : என்னுடைய அபிப்பிராயம், சர்க்காருடைய அபிப்பிராயம், இந்த வித்தியாசம் இருக்கக்கூடாது என்பது தான். இதை எந்த முறையில் நீக்கலாம் என்பதைப்பற்றியும் ஆலோசனை செய்து பிளானிங் கமிஷனிடமும், மத்திய சர்க்காரிடமும் யோசனை கூறியிருக்கிறோம்.

SRI N. K. PALANISAMI : அவர்கள் வேலை செய்யக்கூடிய நேரத்தை ரெகுலரைஸ் செய்ய சர்க்கார் அத் திட்டம் பற்றி என்ன முடிவு செய்தார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போதே **Hours of Work** இருக்கிறது.

### *Home-sites for Harijans*

* 244 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state the action taken so far to provide the Harijans of Avanipur village, Olakur firka in Tindivanam taluk, South Arcot district, with house-sites?

THE HON. SRI M. A. MANICKAVELU : The Collector of South Arcot is taking action to assign the land in R.S. No. 703 measuring 11·29 acres of Avanipur village for accommodating about 140 families of Harijans.

SRI M. JAGANNATHAN : கலெக்டர் மூலம் நிலத்தை ஹரிஜனங்களுக்கு குடிமனை வழங்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த நிலம் புறம்போக்கு நிலமா ? அல்லது தனியார் நிலமா ? தனியார் நிலமாக இருந்தால் சர்க்கார் அதை ஆர்ஜிதம் செய்த பின்னர் தான் அதை வழங்க முடியும். அதற்கு இரண்டு மூன்று வருடம் காலதாமதமாகிறது. இதற்கு மத்தியில் ஹரிஜனங்கள் குடிமனைக்கு போதிய வசதியில்லாமல் பல நோய்களுக்கு ஆளாகி மடிந்து வருகிறார்கள். ஆகவே இதை உடனடியாக கவனித்து குடிமனை வழங்க அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அது, புறம்போக்கு நிலம் என்று நினைக்கிறேன். அதை நத்தம் புறம்போக்காய் மாற்றி ஹரிஜனங்களுக்குக் கொடுப்பதாக உத்தேசம். அதை நல்ல முறையில், சௌகரியமாக, சுகாதார முறையில் இந்த வீடுகள் அமைய வேண்டுமென்று, அதற்காக டவுன் பிளானிங் அனுமதியை எதிர்பார்க்கிறோம். அது வந்ததும் கூடிய சீக்கிரம் செய்யப்படும்.

8th March 1958]

**SRIMATHI T. N. ANANDANAYAKI :** சில இடங்களில் மனைக்கட்டுகளுக்கு என்று நல்ல விளைச்சல் நிலங்களை எடுத்துக்கொள்ளுகிறார்கள். உள்ளூர் கணக்குப் பிள்ளையை விட்டு எழுதச் சொல்லி வம்புக்கு இழுத்து விடுகிறார்கள். ஆகவே, விளைச்சல் நிலங்களை எக்காரணத்தை முன்னிட்டும் இந்த மனைக்கட்டுகளுக்காக எடுக்கக் கூடாது. அப்படி எடுத்தால் உணவுப் பிரச்சினை பாதிக்கப்படுமாதலால், அதைப்பற்றி கவனிப்பீர்களா ?

**THE HON. SRI M. A. MANICKAVELU :** இந்தப் பிரச்னையில் வம்புக்கு இழுக்கிறது ஒன்றும் கிடையாது.

**SRI N. MARUDACHALAM :** புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டியிருக்கும் ஹரிஜனங்களை அதிலிருந்து வெளியேற்ற கலெக்டர் நோட்டீஸ் அனுப்பியிருப்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ?

**THE HON SRI M. A MANICKAVELU :** இந்த நிலத்தைப் பற்றித் தான் சொல்ல முடியும், மற்ற விஷயங்களைப் பற்றி தனியாக கேள்வி கேட்கவேண்டும்.

*Coffee and Tea Plantations*

* 245 *Q*.—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the acreage of coffee and tea plantations in Coimbatore and Nilgiris districts (districtwar) ;

(*b*) the quantity and value of coffee and tea produced during the last five years; and

(*c*) the number of labourers employed in these plantations (districtwar)?

**THE HON. SRI R. VENKATARAMAN :** A statement* furnishing the information is placed on the table of the House.

**SRI P. G. MANICKAM:** இந்தப் பிரதேசத்தில் காப்பி தேயிலை தோட்டங்களில் ஒரு லட்சத்தி எண்ணாயிரத்தி எண்ணூத்தி நாற்பது தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். இவர்களில் 80 சத விகிதம் ஹரிஜனங்கள். ஆகையால் அவர்களுடைய நன்மையைக் கருதி அவர்களுக்கு ராஜ்ய இன்ஷூரன்ஸ் திட்டத்தில் விஸ்தரிக்க சர்க்கார் யோசனை செய்யுமா ?

**THE HON. SRI R. VENKATARAMAN :** Sir, the Employees State Insurance Act is applicable only to factory workers.

**SRI M. KALYANASUNDARAM :** ஆனைமலைத் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு, இன்டஸ்ட்ரியல் டிரிப்யூனல் அவார்ட் சம்பந்தமாக சமரசம் ஏற்படாமல் இருக்கிறது. அப்படி ஒரு சமரசம் ஏற்படுத்த சர்க்கார் என்ன என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் ?

**THE HON. SRI R. VENKATARAMAN :** இதில் சமரசம் ஏற்படுத்துவது என்று சொல்வது சரியல்ல. ப்ளான்ட்டேஷன் தொழிலாளர்கள் எல்லோருக்கும் ஒரு தீர்ப்பு கொடுக்கப்பட்டது. அந்தத் தீர்ப்பின் பேரில் தோட்ட முதலாளிகள் சுப்ரீம் கோர்டிற்கு அப்பீல் செய்தார்கள். ஸ்டேயும் வாங்கிவிட்டார்கள். நீலகிரி ஜில்லாவில் இருக்கும் தோட்டத் தொழிலாளர்களும் இன்னும் சிலரும் இதுபற்றி ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். அந்த ஒப்பந்தத்திற்கு ஆனைமலை தோட்டத் தொழிலாளிகள் ஒத்துக் கொள்ளவில்லை. அதில் சேரவில்லை. ஆகவே கோர்ட் தீர்ப்புப்படி நடக்க வேண்டியது சட்ட பூர்வமான நிலையாகும். இருந்தாலும் சர்க்கார் அதில் தலையிட்டு அவர்களுக்கும் தோட்ட முதலாளிகளுக்கும் ஒரு சமரசம் செய்து

---

* Printed as Appendix I on page 544 infra.